அரசு கல்லூரிகளில் – தற்காலிகமாக

560 கௌரவ விரிவுரையாளர்கள் பணி நியமனம்!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, செப். 2-

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் 560 கௌரவ விரிவுரையாளர்கள் பணிய மர்த்தப்பட்டுள்ளதாக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித் துள்ளதாவது:

தமிழ்நாடு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற் கான மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற வேண்டும், அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக, அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000 க்கும் மேற்பட்ட கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. இதில் நிரந்தர உதவிப் பேராசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை, மாணாக்கர்களுக்கான கல்வி கற்றலில் தொய்வு ஏற்படாமல் இருக்க கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்த முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அதன்படி, 21.07.2025 அன்று கௌரவ விரிவுரை யாளர்கள் தற்காலிக பணியமர்த்துதலுக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டது. தகுதியானவர்களுக்கு 18.08.2025 அன்று முதல் 28.08.2025 வரை அந்தந்த மண்டலங்களில் நேர்காணல் நடைபெற்றது.

நேர்காணல் முடிவில் தற்போது தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களின் தெரிவுப் பட்டியல் tngasa.org என்ற இணையதளத்தில் நேற்று (01.09.2025) வெளியிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் தங்களது பயனர் குறியீடு (User id) மற்றும் கடவுச்சொல் (Password) வழியாக தாங்கள் தெரிவு செய்யப்பட்ட கல்லூரி மற்றும் விவரங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 08.09.2025க்குள் உரிய கல்லூரிகளில் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் பணியில் இணைய வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித் துள்ளார்.

பத்திரிகையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர் - துணை முதல்வருக்கு

தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் சார்பில் நன்றி!

மாநிலத் தலைவர் மு.சிவதமிழன் அறிக்கை!

சென்னை, செப். 2 -

பத்திரிகையாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோருக்கு டி.என்.பி.எம்.ஆர்.யூ. மாநிலத் தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் மாநில தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பின்படி இனி தொலைக்காட்சி, நாளிதழ், பருவ, மாத இதழ் பத்திரிகையாளர் அனைவரும் நலவாரிய உறுப்பினராகலாம் என்கிற அறிவிப்பு இதுவரை எந்த அரசும் தராத ஒரு அற்புதமான அறிவிப்பாகும்.

அரசு அங்கீகார அட்டை, அரசு அடையாள அட்டை, பேருந்து பயண அட்டை ஆகிய அடையாள அட்டை இல்லாத பத்திரிகையாளர்களும் பத்திரிகையாளர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டுமென்ற நமது கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து வட்டார நிருபர்கள் உட்பட அனைவரும் நலவாரிய உறுப்பினராக இணைய முடியும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.

மேலும் கடந்த ஆக.14ந் தேதி நடைபெற்ற நல வாரியக் குழுவின் 9வது கூட்டத்தில், ஆசிரியர் குழுவில் (எடிட்டோரியல் போர்ட்) உள்ள அனைவரும் உறுப்பினராகலாம் என்று இறுதி செய்யப்பட்டது.

இதற்கான விண்ணப்பம் தற்போது வெளியிடப்பட்டு, மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. செய்தி மக்கள் தொடர்புத் துறை இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

நலவாரிய உறுப்பினராக இணைவதற்கான தகுதிகள் மற்றும் விவரங்கள், எவரெல்லாம் உறுப்பினராக சேரலாம் என்பன உள்ளிட்ட விவரங்கள் விரிவாக விண்ணப்பம் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ளவர்கள், தலைமைச் செயலகம், செய்தி வெளியீட்டுப் பிரிவிலும் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ளவர்கள் மாவட்ட ஆட்சியரக செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

தொலைக்காட்சி, நாளிதழ், பருவ, மாத இதழ், பத்திரிகையாளர்கள், வட்டார நிருபர்கள் என அனைவரும் நல வாரியத்தின் கீழ் வரலாம் என்கிற அறிவிப்பினை தந்த தமிழ்நாடு அரசுக்கும், பத்திரிகையாளர்களின் நலன்பேணும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சுவாமி நாதன் அவர்களுக்கும் டி.என்.பி.எம்.ஆர்.யூ சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் பாண்டிச்சேரியில் 1.9.2025 அன்று நடைபெற்ற புதுவதேசம் மற்றும் டி.என்.பி.எம்.ஆர்.யூ. நடத்திய 15வது ஆண்டுவிழா மாநாட்டில் சிறப்பு நன்றி அறிவிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் மாநில தலைவர் டாக்டர் மு.சிவதமிழன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாநில மகளிர் அணி – மகளிர் தொண்டரணி – பிரச்சாரக் குழு செயலாளர்கள்

வலைதள பொறுப்பாளர்கள் - ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் கூட்டம்!

ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் பா.இராணி அறிவிப்பு!

சென்னை, செப்.2-

கழக மகளிர் அணிச் செயலாளர் ஹலன் டேவிட்சன் - மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு செயலாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், ஆலோசனை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமையில் மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் 04.09.2025 வியாழக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

நடைபெறும் இடம் அண்ணா அறிவாலயம். சென்னை. நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள், 2026 சட்டமன்ற தேர்தல்.

இவ்வாறு மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணி தெரிவித்துள்ளனர்.

திருவல்லிகேணி பகுதி முன்னாள் செயலாளர் க.வே.செழியன் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளையொட்டி துப்புரவு பணியாளர்களுக்கு நல உதவிகளும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர்களுக்கு மத்திய உணவும் வட்ட செயலாளர் க.வே.மோகன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் கமலா செழியன் எம்.சி உள்ளிட்டோர் உடன்னுள்ளார்கள்.

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்துள்ள கீழ்க்கண்ட இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணையாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

வ.எ	இணைப்புச் சங்கத்தின் பெயர்	தேர்தல் ஆணையாளர்
1	திருச்சி பெல் தொ.மு.ச. பதிவு எண். 239/TRI பேரவை இணைப்பு எண். 298	திரு. ஜெ.விஜயகுமார் பேரவை இணைப்பொதுச்செயலாளர் கைபேசி எண். 9444883555
2.	தி சேரன் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. கோவை மண்டலம் பதிவு எண். 444/CBE பேரவை இணைப்பு எண். 329	திரு. எஸ்.கருணாநிதி மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கைபேசி – 9486459759
3.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நீலகிரி மண்டலம் பதிவு எண். 296/NLG பேரவை இணைப்பு எண். 1087	திரு. ஆர்.பெரியசாமி (கரூர்) பேரவைச் செயலாளர் கைபேசி – 9787721028
4.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. வேலூர் மண்டலம் பதிவு எண். 820/NAT பேரவை இணைப்பு எண். 405	திரு. சோம.அழகிரி பேரவைச் செயலாளர் கைபேசி – 9444562051
5.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. தருமபுரி மண்டலம் பதிவு எண். 182/DRP பேரவை இணைப்பு எண். 469	திரு. வி.குருநாதன் (நெய்வேலி) பேரவைச் செயலாளர் கைபேசி – 9443286241

தேர்தல் ஆணையாளர்கள் வாக்காளர் பட்டியல், தேர்தல் அட்டவணை வெளியிட்டு மேற்கண்ட சங்கங்களின் சட்டவிதிகளின்படி தேர்தலை நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

கலைஞரகம்
சென்னை – 17 ,
நாள் : 1 – 9 – 2025

மு.சண்முகம்
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

முதலமைச்சரின் செயலாளர்

அனுஜார்ஜ் தந்தை ஜார்ஜ் மேத்யூ மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 2-

முதலமைச்சரின் செயலாளர் அனு ஜார்ஜ் அவர்களுடைய தந்தையார் ஜார்ஜ் மேத்யூ அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

என்னுடைய செயலாளர் அனு ஜார்ஜ் அவர்களுடைய தந்தையார் ஜார்ஜ் மேத்யூ அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். உடனடியாக, அனு ஜார்ஜ் அவர்களைத் தொடர்புகொண்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் மாமனாரும் சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதி டி.முனுசாமி மற்றும் வழக்கறிஞர் டி.முருகன் தகப்பனார், தேவராஜ் நாயக்கர் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட துணை அமைப்பாளர் சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், டி.கே.வினோத், ர.விஜய்ஆனந்த், மணலி எஸ்.ஸ்டாலின், ஸ்ரீசரவணன், எம்.எஸ்.மணிகண்டன், கே.யுவராஜ், நா.ப.புகழரசு, மணலி புதுநகர் விஜயன், ச.சதீஸ், ம.குரலரசன், மனோஜ்(எ)தமிழ்மாறன், ஆர்.எம். மணி, எஸ்.விக்னேஷ், எம்.டி.மோகன், கு.சுரேஷ், புழல் அஸ்வின், ரூபேஷ், அப்தூல், மற்றும் ஹரிஷ், ஜகா, ஆகாஷ், மணலி மகேஸ், சர்மா, கிரிதரன், சுதர்சன், கே.விக்கி, குமரவேல், பிரபாகரன், குணா, வெங்கட், பாலா, கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம் பேரூர்க் கழகத் துணைச் செயலாளரும் - பேரூராட்சி மன்ற உறுப்பினருமான பீ.சகுபர்சாதிக் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 01.09.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

மயிலை த.வேலு பங்கேற்பு! எஸ்.முரளி முன்னிலை!

124 வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

மா.பா.அன்பு – ஏ.தாஸ் வேண்டுகோள்!

சென்னை, செப். 2-

இது குறித்து வட்டச்செயலாளர்கள் மா.பா.அன்பு - ஏ.தாஸ் ஆகியோர் வேண்டுகோள் வருமாறு:

124வது வார்டில் பொது மக்கள் குறை தீர்க்கும் 'உங்களுடன் ஸ்டாலின்" முகாம் இன்று (02.9.2025) காலை 9.00 மணி முதல் ஆர். கே.மடம் சாலையில் உள்ள பி.எஸ். மேல்நிலைப்பள்ளி நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளர் எஸ் முரளி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ.துவக்கி வைக்கிறார்.

வார்டுக்குட்பட்ட வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பல்வேறு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தினர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து அந்த துறை அதிகாரிகளிடம் வழங்கும் பணியினை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு வட்ட செயலாளர்கள் மா.பா .அன்பு, ஏ. தாஸ் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

73 'அ' வட்ட பகுதிப் பிரதிநிதி ராம்குமார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி – இன்று இறுதிச் சடங்கு!

சென்னை, செப். 2 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு. வி.க, நகர் தெற்கு பகுதி 73 (அ) வட்டம் பகுதி பிரதிநிதி வே.பிரேம்குமார் (எ) ராம்குமார் அவர்கள் நேற்று 01-09- 2025. அதிகாலை 4.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். மறைவு செய்தி அறிந்த, கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் 2.9.2025. அன்று மாலை 3 மணி அளவில் மூலக்கொத்தளம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வெ. வைத்திலிங்கம்
செப்டம்பர் 2 (2013)

1959ல் தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியின் செயலாளர், அவைத்தலைவர், மாநில பிரதிநிதி மற்றும் புதுச்சேரி வடக்கு பகுதி துணைச் செயலாளர் போன்ற பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

புதுச்சேரி மாநிலக் கழக மூத்த முன்னோடியான இவர், இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டாக்டர் பொ. பத்மநாபன்
செப்டம்பர் 2 (1991)

திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.